# கிழக்குப்பல்கலைக்கழகம் இலங்கை

## முதலாம் வருட முதலாம் அரையாண்டு கலைமாணிப் பரீட்சை 2014/2015

(ஆகஸ்ட் 2016)

LIBRARY
EASTERN UNIVERSITY, SRI LANKA.
1 7 MAR 2017

## TL 1112 விமரிசன நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு

நேரம் : இரண்டு மணித்தியாலங்கள்

பகுதி ஒன்றிலிருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி இரண்டிலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

### பகுதி I

1. அ. தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலகட்டங்களை எடுத்துக்கூறி அவை அப்பெயர் பெற்றமைக்கான காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

   ஆ. .சங்க கால இலக்கியங்களைப் பொருள்மரபின் அடிப்படையில் வகைப்படுத்துக. (05 புள்ளிகள்)

   இ. அகத்திணைப் பொருள் மரபில் அமைந்த பாடல்கள் அக்கால இயற்கை நெறிவாழ்வின் அடிப்படையாக அமைந்தவாற்றைத் தெளிவுறுத்துக. (10 புள்ளிகள்)

2. அ. தமிழில் நவீன கவிதையின் தோற்றத்துக்கான காரணங்களைப் பட்டியற்படுத்துக (04 புள்ளிகள்)

   ஆ. நவீன கவிதையின் பண்புகள் யாவை? (04 புள்ளிகள்)

   இ. பாரதியாரின் கவிதைகளில் அப்பண்புகள் வெளிப்படுத்தப்படுமாற்றை உதாரணங்களுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

3. அ. ஆரம்பகாலத் தமிழ் நாவலாசிரியர் யாவர்? (05 புள்ளிகள்)

   ஆ. அந்நாவலாசிரியர்கள் எழுதிய நாவல்களைப் பட்டியற்படுத்துக .(05 புள்ளிகள்

   இ. அவற்றின் பண்புகளை எடுத்துக் காட்டி விளக்குக (10 புள்ளிகள்)

### பகுதி II

4. சங்க மருவியகாலம் இருண்ட காலம் எனக் கூறப்படுவது சரியானதா? உமது விடைக்கான காரணங்களை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுக. (30 புள்ளிகள்)

5. விஜய நகர நாயக்கர் கால இலக்கியங்களின பண்புகளை எடுத்துக்கூறி அக்காலம் இரண்டாவது பக்தியுகம் என அழைக்கப்படுவதற்கான காரணங்களை மதிப்பிடுக. (30 புள்ளிகள்)

6. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்ட புதிய மாற்றங்களைக் குறிப்பிட்டு தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு பத்திரிகைகள் பங்களித்தவாற்றை ஆராய்க. (30 புள்ளிகள்)